

# “ஒத்தாப்பு” -17

Those
Who Bear the Cross in Earth
Who Wear the Crown in Heaven

*Christian Communications*

JULY - AUGUST 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோரின் வசதிக்காக......


| | | |
|---|---|---|
| O | ஜீவ கிரீடம் | — 2 |
| O | எக்காள முழக்கம் | — 5 |
| O | பழிக்குப்பழி வாங்குதலும் கிறிஸ்தவர்களின் பொறுப்பும் | — 7 |
| O | ரசித்ததும் ருசித்ததும் | — 9 |
| O | வேதாகமப் புதிர் – இல. 017 | — 12 |
| O | கவிதைக் களம் | — 13 |
| O | விசுவாசம் என்பது என்ன? | — 17 |
| O | ஆத்தும நேசரின் அங்க மகத்துவம் | — 22 |
| O | ஏனோக்கு – ஏ - நோக்கு | — 25 |
| O | வாசகர் பார்வையில்... தொடர்பு | — 28 |
| O | கொக்ரக்கோ! | — 29 |


அன்பார்ந்த வாசகர்களே,

★ சஞ்சிகையை வாசித்த பின் சகலருக்கும் அறிமுகம் செய்யுங்கள்.
★ நண்பர்களின் விலாசங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.
★ உரிய வேளையில் சஞ்சிகை வெளிவர ஊக்கமாய் ஜெபியுங்கள்.
★ கடிதத் தொடர்புகள் - ஆக்கங்கள், வேதாகமப் புதிர்விடைகள் The Editor, Thodarpu, Dason's, 90 Kandy Road, Kengalla என்ற விலாசத்துக்கும்,
★ சந்தா – நன்கொடைகள் Mrs. B. K. Thurairajah, Director, 'Biblecor - Lanka'. 6, Balahenamulla Lane, Colombo-6, என்ற விலாசத்துக்கும் அனுப்பப்படல் வேண்டும். ஆண்டுச் சந்தா தபாற் செலவுடன் எழுபது ரூபா. காசோலை / காசுக்கட்டளை / முத்திரைகள் மூலமாக இதை அனுப்பலாம்.
★ காசுக்கட்டளையாயின் காசு பெறும் தபாற் கந்தோர் 'வெள்ளவத்தை' எனக் குறிப்பிட மறவாதீர்கள்.


*Thodarpu* — Christian Tamil Magazine for the whole family.
*Founder* — (Late) Rev. Rajakumar Thurairajah
*Director* — Mrs. B. K. Thurairajah
*Editor* — Bro. Devadason Jeyasingh
*Letterpress* — Kumaran Press,
201, Dam Street, Colombo-12.
Phone: 4 2 1 3 8 8

**17th Issue ★ THODARPU ★ Ist July 1994**



தொடர்பு

இதழ் 17
ஜூலை – ஆகஸ்ட்
1994


அன்பார்ந்த வாசகரே,

எல்லாம் வல்ல இயேசுவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்தி இதழ் பதினேழுக்கு வரவேற்கின்றேன்.

கால நீரோட்டத்தின் பெறுபேறாக, நாளும் கோளும் நகர்ந்து தேவையும் சேவையும் திசைமாறிப் போகின்ற காலகட்டம் இது. எங்கு பார்த்தாலும் 'முன்னர் இவ்வாறில்லை' எனப் பெருமூச்சு விடுவோர் – 'இந்தக் காலம் இப்படித்தான்' எனச் சலித்துக் கொள்வோர் – 'இனி எப்படியிருக்குமோ!' என ஏங்குவோர் – ஒருபுறம். மறுபுறமோ 'காலத்திற்கேற்ப நாமும் மாறிக் கொள்ள வேண்டியதுதான்' என எதையும் மேலோட்டமாகவும், இலகுவாகவும் நோக்குவோரும் இருக்கின்றார்கள்.

'பரதநாட்டியம்' என்றொரு கலையை நாம் அறிவோம். அரங்குகள் வித்தியாசப்படினும் அபிநயங்கள் மாறுவதில்லை. முன்னிருந்து ரசிப்போர் வேற்று நாட்டவராயினும் முத்திரைகளில் மாற்றம் ஏற்படுவதில்லை. அக்கலைக்கென்றே அமைந்த தனித்துவம் அப்படி. இடம், பொருள், ஏவல் மாறுபடினும் அதன் அடிப்படை நுணுக்கங்கள் அசையா உறுதி பெற்றிருப்பதால் ஆண்டாண்டு காலமாக அது நின்று நிலைக்கின்றது.

இதே போல் அனைத்து நிலைகளிலும் உள்ள தனித்துவம் பேணப்படுமாயின் அதில் ஒரு புனிதத்துவம் இருந்து கொண்டேயிருக்கும்.

'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; திடன் கொள்ளுங்கள். நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள். உங்களை அழைப்பவர் உண்மையுள்ளவர். ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்' என்றெல்லாம் வேதாகமம் போதிக்கின்றது.

எனவே, உலகக் கவலை, ஐசுவரியத்தின் மயக்கம், கண்களின் இச்சை, ஜீவியத்தின் பெருமை ஆகியவற்றுக்கு அடிமைப்பட்டு விடாமல் அல்லது சந்தர்ப்பத்துக் கேற்ற ஜதி போடாமல் எதிலும் உறுதியாய் நிற்கப் பழகிக் கொள்ளுவோமாக.

தற்சமயம் தொடர்பு வாசகர்களின் தொகை மூவாயிரம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சிக்காக தொடர்ந்தும் ஜெபிக்கவும், உழைக்கவும் முன்வருவீர்களாாக.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
**தேவதாசன் ஜெயசிங்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவ கிரீடம்

— Mrs. B. K. THURAIRAJAH —

போட்டிகளில் வெற்றியீட்ட வேண்டும்; விலையுயர்ந்த பரிசில்களைப் பெறவேண்டும்; வெள்ளிக் கிண்ணங்களை அள்ளவேண்டும்; கேடயங்களைச் சுவீகரிக்க வேண்டும். பதக்கங்களைத் தட்டிக் கொள்ள வேண்டும். அழகுராணிப் போட்டிக்கான அலங்காரக் கிரீடங்களை அணிய வேண்டும்.

இவையெல்லாம் இன்றைய கால கட்டத்தில் வயது, தகைமை, தராதரம் என்ற வேறுபாடின்றி எல்லாரது எண்ண அலைகளிலும் இழையோடி நிற்கும் விருப்பங்களாகும். வெற்றியடைதல்; வெகுமதி பெறவிரும்புதல்; தவறல்ல—நல்ல காரியமே.

உலகை உருவகித்த இறைவன் நிறைவாகவே அதைப் படைத்தார். இறைவன் 'வேண்டாம்' என விலக்கிய கனியை ஆதிமனிதரான ஆதாமும் ஏவாளும் விரும்பிய காரணத்தால் பாவம் உலகில் புகுந்தது. மனித உள்ளத்தில் நிறைவு நீங்கியது. குறைவு குடிகொண்டது. ஏதோ ஒருபக்கம் ஒன்றுமில்லாத மாதிரி ஒரு தன்மை—வெறுமை நிலவியது. அவ்வெறுமை நிலையை நிவர்த்தி செய்வதற்காக மனிதன் வேலைக்கு மேல் வேலை செய்தான். திருப்தி காண்பதற்காகப் பல திட்டங்களை வகுத்தான். ஒன்றுமில்லாத வெற்றிடத்தை நிரப்ப, திருப்தியீனத்தைத் திருப்தி செய்ய பலவித வழிபாடுகளையும் மேற்கொண்டான். ஆனால் எவ்வகையிலுமே பாவத்திற்குப் பரிகாரம் கிடைக்கவில்லை.

விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்த இயேசுகிறிஸ்துவோ எல்லாருடைய பாவங்களுக்காகவும் தம்மைத் தாமே பலியாக்கி சிலுவை மரணத்தையும் வென்று மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

## * மண்ணின் மகுடம்

உலக வெகுமதிகளைப் பெற விரும்பும் அநேகர் அதற்காகக் கடினமாய் உழைப்பதுண்டு. நேரம், பணம் எல்லாவற்றையும் விரயம்

திருமறைக் குறள்பல பக்கம் பக்கமாய்
அருமையாய் உண்டிங்கு 'பாரீர்.  — ஆசிரியர்



செய்து பரிசுகளையும் வெகுமதிகளையும் எதிர்பார்ப்பதுண்டு இதனால் பகை, சண்டை முதலியன ஏற்படுவதுமுண்டு. வெற்றியும் வெகுமதியும் பெற்றால் ஒருவித திருப்தியும் பெருமகிழ்வும். மாறாக தோல்வி யென்றால் சஞ்சலமும் துக்கமும். வெற்றியில் போற்றும் உலகம் தோல்வியில் தூற்றுகிறது. என்றாலும் இவ்வுலக வெற்றிகளுக்கான வெகுமதிகள், கிரீடங்கள், கேடயங்கள் எல்லாமே என்றோ ஒரு நாள் அழியக்கூடியன.

மரதன் ஓட்டம் பற்றி நாம் அறிவோம். பண்டைக் காலத்தில் இவ்வோட்டத்தில் வெற்றி பெறுவோருக்கு ஒலிவமர இலைகளினால் செய்யப்பட்ட கிரீடம் ஒன்று அணியப்படுமாம். காலப்போக்கில் நாகரிக வளர்ச்சி காரணமாக நம் நாட்டில்கூட அழகுராணிகளுக்கு கிரீடம் அணியும் பழக்கம் ஏற்பட்டது. இவை தரமான தங்கக் கிரீடமாக அமைந்தாலும் கூட தற்காலிகமானவையே. நிலையற்ற பூமியில் நிலையற்ற மனிதர்களால் சூட்டப்படும் நிலையற்ற கிரீடங்கள் நிச்சயம் அழியக்கூடியவையே. மன்னர்களின் வாழ்வும், அவர்கள் சூடிய மகுடங்களும், எத்தனைக் காலம் நின்று நிலைத்தன எனபதற்கு வரலாறு சான்று பகரும். ஆனால்...'இறைவன நமக்கு வாடாததும் மாசற்றதும், அழியாததுமான சுதந்திரத்தை வாக்குப பண்ணியுள்ளார்.' 1பேதுரு 1:4 மேலும், 'பிரதான மேய்ப்பர் வெளிபபடும் போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்., (1 பேதுரு 5:4) என்பதாக இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மகிமையின கிரீடயானது மனிதராலோ, மணிகளாலோ ஆக்கப்பட்டது அல்ல. இறைவன் தரும் நிரந்தர வெகுமதியின் சின்னம் அது.

## * விண்ணின் கிரீடம்

உலகின் பாவத்தைப் போக்க தம்மையே பாவ நிவாரணபலியாக்கிய இயேசுவை விசுவாசிப்போருக்கு இவ்விண்ணின் கிரீடம் உறுதியாக்கப்பட்டுள்ளது. தம்மை ஏற்போருக்கு வெகுமதியாக அம் மகிமையின் கிரீடத்தை தயார்ப்படுத்தியுள்ளார் இயேசு. அதே வேளை நமது வாழ்நாளில் தமது மகிமைக்காக ஜீவிக்கும்படி நம்மை வற்புறுத்தியுள்ளார். ஆனால், அவ்வாறு ஜீவிக்க ஆரம்பித்ததுமே

எலும்பொன்றால் இருதனத் தழகிதோன்ற மனம்
கரும்பொன்றாய்க் கலந்தது சாறு.  — ஆதி. 2 : 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயமாக எதிர்ப்பு, வீழ்ச்சி, துன்பம் வரப்பார்க்கும். வரும். நம்மை விழுத்துவதற்குப் பிரதான எதிரியான சாத்தான் சந்தர்ப்பம் பார்த்தபடி இருப்பான். எனவே அவனை எதிர்த்துப் போராட எப்போதும் விசுவாசம் என்னும் கேடயத்துடன் தயாராக இருக்க வேண்டும்.

இறைவனுக்கென்று வாழ முற்பட்ட பவுல் அநேக இம்சைகளுக் கூடாக நடந்தான். வெற்றி பெற்றான். எனவேதான். ''நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல; அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' (2 தீமோத்தேயு 4:6-8) என்பதாக எழுதுகிறான்.

இவ்வாறு விசுவாசிகளுக்கு அருளப்படும் கிரீடம் நிலையானது. நிரந்தரமானது. விலைமதிப்பற்றது. அழியாதது. இதை எமது சுய சித்தத்தினாலோ, முயற்சினாலோ பெற்றுவிட முடியாது. இயேசு கிறிஸ்துவினூடாக அளிக்கப்பெற்றுள்ள கிருபையினாலாகும்.

''நீ மரண பரியந்தமும் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.'' (வெளி 2:10) என்கிறார் இயேசு. முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் ஆரம்ப முதல் இறுதிமட்டும் உறுதியாய் உண்மையாய் இருக்கவேண்டும். இயேசுவின் வருகைக்காக முறையோடு காத்திருக்க வேண்டும். ''ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்'' (2 தீமோத்தேயு 2:5) என்கிறான் பவுல். எனவே, மணவாளனாகிய இயேசு மீண்டும் வரும்போது எம்மை யேற்று அந்த மகிமையின் கிரீடத்தை– ஜீவ கிரீடத்தை எமக்குத் தரிப்பிக்க நாம் எம்மைத் தகுதியுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

**''இதோ! சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடி உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு'' (வெளி; 3:11)**

**மண்ணில் சிலுவையைத் தாங்குவோர்**
**விண்ணில் கிரீடத்தைத் தாங்குவர்** ★

**இடையினில் உடையிலா திருந்தும் வெட்கம்**
**அடையிலர் அன்பினால் காண். — ஆதி. 2 : 25**



# எக்காள முழக்கம்

தேவ ஊழியர் – **S. J. பத்திநாதன்**

## * MAKE THEE TWO TRUMPETS OF SILVER

அன்று... தேவசேனை எக்காளம் ஊதிப் புறப்படும் காட்சி கண் கொள்ளாததாய் அமைந்திருக்கும்! சபையைக்கூடி வரவழைப்பதற்கும், பாளயங்களைப் பிரயாணப்படுத்துவதற்கும் உபயோகமாக இரண்டு வெள்ளிப் பூரிகைகளைச் செய்து கொள்ளும்படி கர்த்தர் மோசேயிடம் கூறுகிறார். அதுமட்டுமல்ல, ''நீங்கள் பெருந்தொனியாய் அதை முழக்கும்போது கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக் கடவது'' என்றும் கூறுகிறார். (எண். 10:1-10) அன்றைய இஸ்ராயேலின் வனாந்தரப் பயணத்திலே இந்த 'எக்காள சத்தம்' மிக முக்கியமான ஒரு காரியத்தை அவர்களுக்கு அறிவித்துக் கொண்டேயிருக்கிறது.

இதை வாசிக்கும் சகோதரனே! சகோதரியே! இதோ இந்த 'எக்காளம்–தேவசெய்தி' எம்மை நல்வழியில் நடத்துவதற்கும், நமது ஆன்மீக வாழ்க்கையைத் தட்டி எழுப்புவதற்கும், இந்த கடைசி நாட்களில் தூங்கிக் கொண்டிருக்கும் நம்மை எக்காள சத்தத்தின் மூலம் விழித்தெழச் செய்வதற்கும் ஏதுவாக அமைந்திருக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் இந்த எக்காள முழக்கத்தின் போது என்னென்ன நிகழ்ந்தன என நோக்குவோம்.

## 1. யுத்த தளபதியாகிய யோசுவாவின் எக்காள முழக்கம்

அன்று... இஸ்ராயேலருக்கும் தனக்கும் எதிராகவும், தடையாகவும் இருந்த எரிகோ மதிலாகிய எதிரியின் கோட்டையைத் தகர்க்க எக்காளங்களைப் பயன்படுத்தினான் யோசுவா. எக்காளங்கள் ஊதப்படுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். அவர்கள் மகா சத்தமாய் முழங்கும்போது அலங்கம் இடிந்து விழுந்தது. அப்பொழுது இஸ்ராயேலர் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார்கள். (யோசுவா 6:20)

இன்று...எங்கு பார்த்தாலும் எமது எதிராளியான சாத்தான் ஆவிக்குரிய ஜீவியம் செய்ய முற்படுகிறவர்களுக்கு விரோதமாக இன்னல்களையும், இடையூறுகளையும் ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறான். 'கெர்ச்சிக்கிற சிங்கம்போல யாரை விழுங்கலாமோ என வகைதேடிச் சுற்றித் திரிகிறான்.'' (1 பேதுரு 5:8). ஆகவே,

**கனியுண்ணும் ஆசையை ஊட்டினான் தீயோன்**
**இனியென்ன இழவுதான் பார். ஆதி. 3 : 06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்தும், விழித்திருந்தும் ஜெபமாகிய எக்காளத்தொனியுடன், துதியுடன் தேவனை ஆராதிக்கும்போது சத்துருவான பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான். அவனது கோட்டையைத் தகர்க்கவும் நம்மால் முடியும்.

* ''எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்'' -சங். 150:3.

## 2. யோவேல் தீர்க்கதரிசியின் எச்சரிப்பின் எக்காளம்

சீயோனிலே எக்காளம் ஊதுங்கள் — (யோவேல் 2 : 1, 15) ''எக்காளத்தை ஊதுங்கள்; ஜனத்தை ஆயத்தப்படுத்துங்கள்' என யோவேல் தீர்க்கதரிசி மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகிறான். இனிக் காலமில்லை! ''சீயோனிலே எக்காளம் ஊதுங்கள்! என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்! ஏனெனில், கர்த்தருடைய நாள் வருகிறது; அது சமீபமாய் இருக்கிறது.''

''சமீபமாய் இருக்கிறது' என்று குறிப்பிடக் கூடிய காரணம் யாதெனில் எங்கு பார்த்தாலும் யுத்தங்கள்; யுத்தங்களின் செய்திகள், ஜனத்திற்கு விரோதமாய் ஜனம்! ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யம்! பஞ்சங்கள்! கொள்ளை நோய்கள்! பயங்கர அழிவுகள்! மனுஷ கொலைகள்! ஜனங்கள் துரத்துவாரின்றியே ஓடுகிறார்கள். மனித இரத்தம் வீதிகளிலே சிந்தப்படுகிறது. இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பமாக-அடையாளமாக அமைவது மட்டுமல்ல; தேவ வார்த்தையாகிய வேதாகமம் இவை யாவும் எவைகளுக்கு அடையாளம் எனக் கூறுகின்றது.

இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் அவரிடம் உம்முடைய வருகைக்கும் உலகின் முடிவுக்கும் அடையாளம் என்ன?'' என்று கேட்டபோது அவர் கூறிய பதிலை மத்தேயு சுவிசேஷம் 24: 4-14 வரை வாசித்துப் பாருங்கள். அன்று இயேசு கூறியவற்றை இன்று நம்முடைய கண்களினாலே காண்கிறோம். காதுகளினாலே கேட்கிறோம். அனுபவிக்கிறோம். எனவே, தேவ எக்காளம் முழங்கும் கடைசிக்கால கட்டத்திற்கு நாம் சமீபித்து விட்டோம்.'' கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்'' - (1 தெச. 14:16). எனவே, தாமதிக்க வேண்டாம். இன்றே-இப்பொழுதே ஆயத்தப்படுங்கள். மத். 24:36 1 பேதுரு. 1:13. 2 பெதுரு 3:9 வாசியுங்கள். ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்.'' (2 பேதுரு. 3:10).

எனவே, இன்னும் தேவ எக்காளத்தை – எச்சரிப்பின் சத்தத்தை அசட்டைபண்ண நேரமில்லை. எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! ''சிதறடிக்கிறவன் உன் முன்பாக வருகிறான். அரணைக் காத்துக்கொள்! வழியைக் காவல் பண்ணு! அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொள்! உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து! (நாகூம். 2:1) அல்லேலூயா! ★

---

**இரத்தம் சிந்துதல் ஆகாதே ; ஆகும்**
**இரத்தமே சிந்துவார் சிந்தில். எண். 35 : 33**



# பழிக்குப்பழி வாங்குதலும் கிறிஸ்தவர்களின் பொறுப்பும்

வேதபாடம் (1 சாமு. 26:1-11)

அருள்திரு K. நித்தியானந்தன்-கரவெட்டி.

ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்று வரும் நாடுகளில் அப்பாவி மக்கள் பலியிடப்படுவதும்; பழிவாங்கப்படுவதும் சர்வ சாதாரணமான நிகழ்வுகளாகி விட்டன. அரச படையினர் தாக்கப்படும் பட்சத்தில் அவர்களது கோபம் அப்பாவிப் பொதுமக்கள்மேல் திரும்புவதும், அதேபோல் போராட்டக் குழுக்கள் பாதிக்கப்படும்போது தமது கோபத்தைப் பொது மக்கள் மீது காட்டுவதும் இன்று நடைமுறையாகி விட்டன.

எமது நாட்டிற்கும் இது விதிவிலக்கானதல்ல. ஏன்? கிறிஸ்தவர்கள் கூட தமது இனம் தாக்கப்படும்போது அனுதாபப்படுவதும் அதற்குப் பழிவாங்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதும், அதன பெறுபேறாகத் தமது சகோதர இனங்களில கொலைகள இடமபெறும்போது எமக்குள் சந்தோஷம் கொள்ளுவதும், முன்னேற்றமடையாத சில தன்மைகளையே காட்டுகின்றன. இப்படியான பழிவாங்கும் நிகழ்வுகளை மறைமுகமாக சிலவேளை நேரடியாக வரவேற்பவர்கள் கூறிக்கொள்ளும ஒரேயொரு சமாதானம ''உரிமைகளுக்காகப் போராடும்போது இவை இடமபெறத்தான் வேண்டும்; பழிவாங்குதல் தவிர்க்க முடியாதது'' என்பதாகும.

பழிவாங்குதலை திருமறைக் கண்ணோட்டத்தோடு நாம் பார்க்கும்போது ஆரம்பத்திலிருந்தே 'பழிவாங்குதல் மனிதருக்குரியதலல' என்பது தெளிவாகிறது. வாக்களிக்கப்பட்ட நாட்டில குடியேற்றுவதற்காகவும், தமது திருநாட்டை நிலைநிறுத்துவதறகாகவும இஸரா யேல் மக்களை யுத்தததிற்கு ஏவும் கர்தததா தம இனத்துக்கு ஏற்பட்ட தீமைகளுககாகப பழிவாங்கும் விடயததை மட்டும தனககுரியது என்கிறார். காரணம; பழிவாங்கும் எண்ணம் மனிதனுககுத தோன்றும்போதெல்லாம் சரியான பாதையை அவனுக்கு உணர்தது பவராகவும் இருககிறார்.

1 சாமுவேல் 26:1-11 வரையுள்ள திருமறைப் பகுதியில் கர்த்தர் மனிதனைத் தனிப்பட்ட பழிவாங்குதலிலிருந்து விடுவித்துக் காப்பதைக் காணலாம். சவுல் தாவீதைக் கொலலுவதற்குப் பொறாமை கொண்டவனாக அலைகிறான். தாவீதோ இருக்க இடமற்று, நிம்மதியற்றவனாய் அலைகின்றான். அவ் வேளைகளில் தன் எதிரியான சவுலைக் கொல்லுவதற்கு தாவீதுக்கு அருமையான பல சந்தர்ப்பங்கள் ஏற்படுகினறன. தாவீதோடிருந்தவர்கள் சவுலைக் கொன்று

---

**ஏனோக்கு இறைவனுடன் நடந்தான் வானோக்கி**
**வானோரின் வடிவானான் வாழ்த்து. ஆதி. 5 : 24**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும்படி தாவீதை ஊக்குவிக்கின்றனர். 'கர்த்தர்தான் இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தந்தார்' எனவும் உற்சாகமூட்டுகின்றனர். ஆனால் தாவீதோ தன்னைப் பகைவனாக எண்ணி தனக்குத் தீமைசெய்ய முற்படுபவனை பழிவாங்க விரும்பாதவனாக 'கர்த்தர் அபிஷேகம் பண்ணினவர்மேல் என் கையைப் போடமாட்டேன்' என்கிறான், பழிவாங்குதலுக்குத் தனக்கு அருமையாகக் கிடைத்த அச்சந்தர்ப்பத்தைக் கூட தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள தாவீது விரும்பவில்லை. இச்சம்பவம் தாவீதுக்கு ஒரு சோதனையாகவே வருகின்றது. பகைவனைத் தாவீதின் முன் கொண்டுவந்த கர்த்தர் இச்சந்தர்ப்பத்தில் தாவீது எவ்விதம் செயற்படப்போகிறான்? கடவுளால் கொடுக்கப்பட்ட ஞானத்தை எப்படிப் பாவிக்கப் போகிறான் என்பவற்றை உன்னிப்பாகக் கவனிக்கிறார். தாவீது கர்த்தர் தனக்குக் கொடுத்த கொடையான ஞானத்தைச் சரியான தருணத்தில் பாவித்து இச் சோதனையை வெற்றி கொள்ளுகிறான்.

தாவீது நடந்துகொண்டமுறை அன்று அவனோடிருந்த மக்களால் பரிகாசம் பண்ணப்பட்டிருக்கலாம். ஆனால் அவனது நடத்தை கடவுளுக்கு முன் உத்தமமானதாயிருக்கும் அதே வேளை சவுல் தன்னைப் பற்றியும், தான் கொல்லத் துடிக்கும் தாவீதைப் பற்றியும் உணர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளிப்பதையும் காண்கிறோம். பழைய ஏற்பாட்டுக்கால வரலாற்றில் பழிக்குப் பழி வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் சமுதாயம் அறிவு பூர்வமாக முன்னேற்றமடைந்துவரும்போது இக்கருத்தும் மாறுபடுவதைக் காணலாம்.

புதிய ஏற்பாட்டில் ஒரு திருப்பம். அதாவது இயேசு 'அன்பினால் அரவணையுங்கள்; தீமை செய்பவர்களையும் சிநேகியுங்கள்' என்கிறார். தன் சீடன் வெட்டியதைக் கண்டிப்பவராகவும், அந்த ஊனத்தைச் சுகமாக்குபவராகவும், தனக்குக் கொடுமை செய்பவர்களுக்காக சிலுவையில் தொங்கிக் கொண்டே மன்றாடுபவராகவும் காணப்படுகிறார். அவ்வகையில் இயேசுவே எமக்கு முன் உதாரணமாகத் திகழுகிறார்.

இன்று அநேக நாடுகளில் 'கொலைக்குற்றம் செய்தவனைக் கொலை செய்தல்' என்ற தண்டனை நீக்கப்பட்டு வருவதையும் பார்க்கிறோம். எனவே கிறிஸ்தவம் என்ன சொல்லுகிறது? தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள் என்றே திருமறை கூறுகின்றது. பழிக்குப் பழியென்பது மாபெரும் தவறான காரியம். இத்தகைய வெறியால் நாம் தூண்டப்படும்போது கடவுள் தந்த ஞானத்தைப் பாவிப்போமாக. ஏனைய சமூகத்தவரை எதிரியாக நோக்காமல், தீமை செய்பவனை அதை உணர்த்துவதன் மூலம் மன்னித்து மனந்திருந்த இடமளிப்போம். இவ்வண்ணமாய் கிறிஸ்தவப் பொறுப்புக்களை நிறைவேற்ற முன்வருவோமா? ★

**ஒலிவமரத் துளிரோடு ஓடிவந்த புறாதூது**
**தெரியலையோ ? சமாதானப் புறா. ஆதி: 8 : 11**



# ரசித்ததும் ருசித்ததும்

● DAMARIS GNANAMANICKAM

★ வேதாகமம் இல்லாவிட்டால்...

முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவ ஜீவியம் 'தொடர்ந்து வேதாகமத்தைப் படித்தல்' என்னும் அஸ்திபாரத்தின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது. தொடர்ச்சியாக வேதாகமத்தைப் படித்தாலொழிய நிறைவான ஆவிக்குரிய வாழ்வை அனுபவிக்க முடியாது. பில்லிகிரகாம் என்பவரின் கூற்றுப்படி வேதாகமத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களில் 12 வீதமானோர் மட்டுமே அதைத் தினமும் உண்மையாக வாசிக்கிறார்கள். 34 வீதமானோர் கிழமைக்கு ஒரு தடவையும், 42 வீதமானோர் இருந்திருந்தும் வாசிக்க ஏனையோர் ஆலய ஆராதனைகளில் கேட்கும் வசனங்களை மட்டுமே அறிகின்றார்கள்.

பத்திரிகையை அனுதினமும் வாசிப்போர் 'பைபிள்' வாசிக்க நேரமில்லை என்பார்கள். சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் பத்திரிகை வாசிப்போர் ஏராளம். அந்த அளவு நேரம் வேதாகமம் வாசிக்கப்படுமானால் ஒரு வருடத்தில் முழுவதையுமே வாசித்து விடலாம். புதிய ஏற்பாட்டை இருமுறை வாசித்து விடலாம்.

★ வேதாகமம் இல்லாவிட்டால்...

எது சரி? எது பிழை? என்று கடவுள் தரும் அறிவை இழந்து விடுவோம். நல் நடத்தை எது? எது தீயது? என்ற ஒழுங்கை உணராதவர்களாகிவிடுவோம். பொலிவியாவின் ஒரு காட்டுப் பகுதியில் நான் ஊழியம் செய்த நாட்களில் ஓர் அனுபவம்.

ஒரு நாள் இரவு ஊழியர் ஒருவர் வந்து ஆராதனைக்கு வருகிறீர்களா? இரவு 8 மணிக்கு ஆராதனை என்றார். 'கோயில் எங்கே?' என்றேன். 'இங்கேயேதான்' என்றார்-ஒரு அர்த்தமுள்ள சிரிப்போடு. அரை மணி நேரத்துக்குள் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் அங்கு கூடினார்கள். சற்று நேரத்தில் சிறிய உருவம் உள்ள ஒரு மனிதர் தன் நெஞ்சோடு வைத்திருந்த சிறிய புத்தகம் ஒன்றை எடுத்தார்.

**பலியினால் வந்ததோ சுகந்தவாசனை ; பலியை**
**நுகர்ந்ததோ இறைவனின் உள்வாசனை. ஆதி. 8 : 21**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது 1 கொரிந்தியர் நிருபம். அவர் எழுந்து அரை மணி நேரம் பிரசங்கித்தார். இரண்டாவதாக எழுந்தவர் அந்தக் கிராமத்திலே இருந்த ஒரே ஒரு எபேசியர் நிருபத்தை எடுத்துப் பிரசங்கித்தார். பின்னர் இன்னொருவரும் பிரசங்கித்தார், ஒரே ஆராதனையில் 3 பிரசங்கங்கள்.

திடீரென எனக்கருகில் இருந்த ஒரு பெண் அழ ஆரம்பித்தார். கர்த்தர் அவள் உள்ளத்தைத் தொட்டபடியால் அவள் எழும்பி தன் பாவங்களையெல்லாம் அறிக்கையிட்டுக் கர்த்தரிடத்திலும் சபை யோரிடத்திலும் மன்னிப்புக் கோரினாள். அவள் மன்னிப்புப்பெற்று சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். இவையெல்லாம் அங்கு நடைபெறக் காரணம். அப்போஸ்தலருடைய நடபடிகள் அங்கு வாசித்து விளங்கப் பெற்றமையே. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அச்சபையில் வேதாகமம் இல்லை. மன்னிப்பும் இல்லை. எது சரி, எது பிழையென அறியும் பக்குவம் இல்லை.

★ வேதாகமம் இல்லாவிட்டால்...

வாழ்க்கையின் ஆழ்ந்த கேள்விகளுக்கு கர்த்தரின் விடைகளை அறியமாட்டோம். விடைதர முடியாத பல கேள்விகளை நாம் கேட்போம். நான் யார்? எங்கிருந்து வந்தேன்? ஏன் இங்கு இருக் கிறேன்? எங்கு போகிறேன்? என்ற கேள்விகளுக்கு விஞ்ஞானத்தில் விடைகாண விழைவோம். காலையில் ஒவ்வொரு நாளும் எழுந்து நாம் ஏன் இங்கே இருக்கிறோம் என அறியாமல் விழித்தால் எப்படி இருக்கும்? நாம் காணாமற் போனவர்கள்போல இருப்போம்.

★ வேதாகமம் இல்லாவிட்டால்...

வேதாகமத்தின் உண்மைகளை விசுவாசிக்காத அறிவாளிகள் வாழ்க்கையில் பயனில்லை என்ற முடிவுக்கே வருவார்கள். நாம் தோன்றியது ஒரு விபத்து. எமது வாழ்க்கையில் அர்த்தமில்லை. எனவே மரணத்திற்குப் பின்னர் என்ன நடக்கும் என்பதை அறிய விரும்புவதுமில்லை. வேதாகமத்தை வாசிக்காவிட்டால் வாழ்க்கை யின் கேள்விகளுக்கு விடைகாண முடியாது. கர்த்தர் நம் நல்ல வாழ்வுக்கு விதித்த விதிகளையும் இழந்து விடுவோம். ஒரு காரியத்து காகப் பணம் செலழித்தால் அதனால் பயனடைகிறோம். அதே போல் வேதாகமம் வாசித்தால் நிச்சயம் பயனுண்டு.

பழியும் இரத்தமும் நான்வாங்கு வேன்பிறர்
பிழியும் இரத்தம் சிந்திடில். — ஆதி. 9 : 56



★ வேதாகமம் இல்லாவிட்டால்...

சுவிசேஷ ஊழியம், புதுப்பித்தல், மாற்றம் என்பவற்றுக்காக கர்த்தர் எமக்குத் தரும் அழைப்பை இழந்துவிடுவோம். எமது பாவங் களைப்போக்க இயேசுகிறிஸ்து சிலுவையில் மாண்டார் என்னும் சுவிசேஷ செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் மாட் டோம். விசேட செய்தி ஏதும் எம்மிடம் இருக்காது. பத்திரிகைச் செய்திகளைப் படிப்போம். உலக நிலைமைகளைக் குறைவற அறிந் திருப்போம். ஆனால் பாவத்துக் கெதிரான பிரசங்கங்களை அறிய மாட்டோம். இரட்சிப்படைய வழி இருக்காது.

★ வேதாகமம் இல்லாவிட்டால்...

கர்த்தரை அறிந்து கொள்ளும் இரகசியம் நிலைக்கமாட்டாது. எமது இதயங்கள் கர்த்தருக்காக ஏங்கும். பரமபிதாவை அடையும் வழி என்ன என்பதை அறிய முடியாது. பயமும் திகிலும் எம்மை ஆட்கொள்ளும். சங்கீத புத்தகத்தை வாசித்தால் நம்மைக் கட்டி யெழுப்ப, இந்தப் பாதையில் வேறு மனிதரும் சென்றிருக்கிறார்கள் என அறிவிக்க கர்த்தர் அதைப் பாவித்திருக்கிறார் என்பது விளங்கும். வேதாகமம் இல்லாவிட்டால் இவற்றை நாம் அறியமுடியாது. அநேக நற்காரியங்களையும் அறிய மாட்டோம்.

நாளாந்த வேத வாசிப்பு மட்டும் போதாது. வேத அறிவைப் பெற்றுவிட்டால் போதாது. அதை வாழ்க்கையில் உபயோகிக்க- கர்த்தருடன் நடக்க-பயில வேண்டும். எத்தனையோ கிறிஸ்தவர்கள் இன்று வேதாகமம் இருந்தும், இல்லாதவர்களாகவே வாழுகிறார்கள்.

''உமது வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது'' என்றான் மாமன்னன் தாவீது. உம் முடைய விஷயம் எப்படி?

—Thanks – BRUCE WILKINSON

என்வில்லை நினைவாக வைத்தேன் வானில்
எந்நாளும் காத்திட உண்மை. ஆதி. 9 . 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமப் புதிர் - இல. 017

* சகல வினாக்களுக்கும் சரியான விடை எழுதியவர்களுள் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூவருக்கும் பொக்கட் சைஸ் புதிய ஏற்பாடு வழங்கப்படும். ஏனையோரின் பெயர்கள் பிரசுரமாகும்.
* விடைகள் தபால் அட்டையில் எழுதப்பட்டு 30-07-94க்குள் ஆசிரியர் விலாசத்துக்கே அனுப்பப்படல் வேண்டும்.
* விடைகளுடன் உங்கள் விலாசமும் தொடர்பு அங்கத்துவ எண்ணும் குறிக்கப்படல் வேண்டும். அங்கத்துவ எண் இல்லாதோர் ஆண்டுச் சந்தா ரூபா எழுபதை பணிப்பாளருக்கு அனுப்பி அதைப் பெறலாம். அங்கத்துவ எண் அற்ற விடைகள் பரிசீலிக்கப்படமாட்டா.

* இவை யார்? யாருக்குச் சொன்னவை?

1. பகலில் களவு போனதையும் இரவில் களவு போனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர்?
2. உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல் இருக்கிறது.
3. என்னைப் போன்ற மனிதன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்தில் போய்ப் பதுங்குவானோ?
4. எனக்காகக் காத்திரு; நானும் உனக்காக காத்திருப்பேன்.

(பழைய ஏற்பாட்டுச் சம்பவங்கள் இவை)

* புதிர்-இல. 016 — சரியான விடைகள்.

1. யோசேப்பு-(ஆதி.41:14) 2. யோசேப்பு-(ஆதி.50:26)
3. லோத்தும் மகள்களும்-(ஆதி. 19:30) 4. மெத்தூசலா - (ஆதி.5:27)
5. சர்ப்பம்–சாத்தான் (ஆதி.3:5.)

* பாராட்டுப் பெறுவோர்.

E. போல்ராஜ்-ரத்மலானை, S. அப்பாதுரை-அம்பிட்டிய
A. வேதபாலகன்-மட்டக்களப்பு, M. ராஜமணி– பேராதெனிய.

* பரிசு பெறுவோர்.

K. கலாபரன், டெம்பிள் றோட், கல்முனை.
A. மறே, புறொட்டொப்ட், றம்பொட.
S. டேனியல், 585, கெட்டியாதன்ன, கஹவத்தை.

---

வெறியுண்ட உலகில் நெறிகாத்த நோவாநல்
நெறிபிறழ்ந்து பழியானான் பாவில். — ஆதி. 9 : 21



# கவிதைக் களம்



'தொடர்பு' மே - ஜூன் இதழில் வெளிவந்த
'மனிதனைக் காணவில்லையே' என்ற
கவிதைக்கு மறுமொழியாக......

## 1. எனது சாயலைத் தேடிடும் என் மகளே!

— கிறிஸ்து கவி மலைவாணன்

எனது சாயலில்
படைத்த மனிதனைத்
தேடிடும் ராணியே!
உனது தேடலில்
கிடைத்த யாவரும்
சிலுவையின் ஆணியே!
கிணற்று நீரை
இழுத்த வாளியில்
என்னைத் தெரியலையோ?
முகத்துப் பவுடரைப்
பார்க்கும் தாழியில்
உண்மை புரியலையோ?

படைத்து மனிதனை
பகுத்துப் பார்த்திட
கொடுத்த ஞானத்திலே!
தொகுத்துப் பலதை
மறைத்துக் கொண்டனன்
பாவமென் சாயலையே!
நினைத்து நினைத்து
அணைத்துச் சேர்த்திட
கொடுத்த வாய்ப்பினையே!
ஏற்க மறுத்து
ஏய்த்துப் பிழைத்து
மாறிவிட்டான் சாயலே!

மழைக்குக் கூரையின்
ஓரமாய் நான்வந்து
நடுங்கி நிற்கையிலே
பார்த்து வெளுத்து
இழுத்துக் கதவை
மூடிய வேளையிலே
''கிறிஸ்துவே எங்கள்
இல்லத் தலைமகன்''
என்றவோர் வாசகத்தை
நினைத்துப் பார்த்து
சிரித்த துண்டு; நான்
மறைத்துச் சாயலையே!

---

சாபம் ஏற்றதோ கானான் பாவ
நோயைச் செய்ததோ நோவா. — ஆதி. 9 : 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்துக் கரங்கள்
உலர்ந்த வேளை
உறவு வெறுக்கையிலே!
களைத்து இளைத்துப்
பசித்து நானும்
கரத்தை நீட்டையிலே
மலைத்துச் சலித்து
சில்லறை கொடுத்து
மறந்து போகையிலே!
எனது சாயலை
மறைத்த துண்டு; நான்
நினைத்துத் தீர்ப்பினையே!

இனத்து மோதல்கள்
இயற்கைச் சேதங்கள்
இருக்கும் வேளையிலே!
இருந்த துண்டு; நான்
அகதிமு காம்களில்
மனித சாயலிலே!
குணத்து ரோஜாக்கள்
கனத்த பைகளில்
உதவி கொடுக்கையிலே!
விரித்த துண்டு; நான்
மறைத்துச் சாயலை
ஜீவ புத்தகத்தை!

நீதிக்காய்த் துணிந்து
எழுந்து நிமிர்ந்து
முன்சென்ற வேளையிலே!
பின்னிருந் திழுத்த
பேயின் கரங்களை
முறித்த வேளையிலே!
போராட்ட மெதற்கு
மோட்சமே நமக்கு
என்றவோர் சத்தத்தையே
கேட்ட துண்டு; நான்
இரும்புக் கம்பிக்குள்
இருந்த சாயலிலே!

அற்புத வல்லமை
எனது நாமத்தில்
இருப்ப தையறிந்தே
அடிக்கும் ''போஸ்டரில்''
தமது நாமத்தைப்
பெரிதாக வடித்தே
நகர்ச்சுவர்களில்
ஊழிய கூட்டங்கள்
இருப்ப தாயுரைத்தே
ஒட்டிடும் போதுநான்
சிரித்த துண்டுதான்
மறைத்துச் சாயலையே!

பக்கத்து வீட்டினர்
பசித்தி ருக்கையில்
புசித்த உணவினிலே
உப்புக் குறைவென
உரத்த குரலில்
கூறிய வேளையிலே!
கேட்ட துண்டு; நான்
மிருக சாயலில்
மேசைக் கடியினிலே
விழுந்த துணிக்கையும்
விழுங்க முடியாது
வெந்து துயரினிலே!

''உனைப்போல் பிறனை
நேசித்து வாழென்ற''
எந்தன் கற்பனையே!
யாவரும் அறிந்த
ஞாயிறு சந்தையில்
நல்லதோர் விற்பனையே!
வாங்கிப் போனதும்
'பஸ்' வண்டிச் சீட்டுக்காய்
முண்டிய டிக்கையிலே
உடைந்து போவதைக்

கண்ட துண்டு நான்
நொண்டியாய் நிற்கையிலே!

எனது சாயலைத்
தேடி யலைவதும்
வீணே என்மகளே!
உனது தேடலில்
உள்ளவை யாவும்
தேவை தான்மகளே!
எனது சாயலில்
உள்ளவை என்பது
கள்வனைப் போன்றதுவே!
மறைந்து வாழ்ந்திட
மற்றவை யனைத்தும்
தேவை; என்மகளே.

---

தாறுமாறின் தலைநகர் பாபேலாச்சி ; மனிதன்
தன்னையுயர்த்திய தலைக்கனம் போச்சு: — ஆதி. 10 ; 09



## 2. நான் உன்னில் வருவேன்

போதகர் ஏ. சொலமன்ராஜ்
(முன்னாள் பத்திரிகையாளர்)

எங்கும் ஓடி அலையாதே மகளே!
உனக்குள் ஏற்றிடு வந்திடுவேன்
தங்கும் இடம்நான் வேறில்லை - என்
பங்கும் பாத்ரமும் உன் இதயம்

ஒன்று கொரிந்தியர் மூன்றுபதி னாறு
பின்பு ஆறு; பத்தொன்ப தை
யோவான் மூன்று பதினாறை யும்
ஒன்று பன்னிரண்டும் படிமக ளே!

வெளியக மனிதரில் எனைத்தே டி
விரக்தி யடைதல் பிழைமக ளே!
பிழிதினம்வேதா கமம்திற; ஜெபி;
எனைத் தேடு; விளக்குவேன் - துயர்தவிர்

இரட்சிப்பு மனிதனின் மனமாற் றம்
பரிசுத்த ஆவியால் உண்டா கும்
உள்மாற்ற மேயன்றி வேறல்ல; அதனால்
மாறுநீ! மாற்றிடு! மற்றோர் பலரை

உலகுக்குள் ஓடியெனைத் தேடுமுன் மகளே!
உனக்குள் எனையேற்றி ஜெபிதினம் மகளே!
மனத்துக்குள் சமாதானம் வந்திடும் மகளே!
குறைதவிர்; நீக்கிடு பிறர்குறை மகளே!

---

ஆபிரகாம் என்பவன் யூதத்தந் தை;தேவன்
அமைத்ததோ அவனிலே புதியசிந்தை, — ஆதி. 12 :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. விடுதலை...

— ராணி —

ஓ! இறைவா;... இன்று... நீயோ!
பலதரப்பட்ட சபைகளின் சிறைக்குள்
உன் வார்த்தைகளோ!
பற்றிக் கொள்ளக்கூடா கரங்களின் சிறைக்குள்
அழுக்கும் அநியாயமும் வெள்ளணிகளின் சிறைக்குள்
பெண்மையோ! அடிமைத் தனங்களின் சிறைக்குள்
ஆணவமும் அக்கிரமும் ஆண்களின் சிறைக்குள்
சுதந்திரமும் சமத்துவமும் வெடிகுண்டுகளின் சிறைக்குள்
விசுவாசமும் நம்பிக்கையும் பணப்பெட்டிகளின் சிறைக்குள்
ஏழையும் இல்லாதவனும் அகதிகளின் சிறைக்குள்
ஏன்? முழுஉலகுமே— மனித கரங்களின் சிறைக்குள்
எங்கே! எப்போ! யாரால்!
இவற்றிலிருந்து விடுதலையோ?

# 4. மனிதன் யார்? அவன் எங்கே?

— பாவலர் + கிரான் ஜீவன் —

உலகை வென்ற உயர்ந்த ஞானம்
உள்ளதென்றே சொல்லும்
நிலவு மீதில் கொடியை நாட்டி
பெருமை கொள்ளும் மனிதன் — அண்ட
வெளியைச் சுற்றி விந்தை புரிய
எண்ணும் இந்த மனிதன் — இந்த
உலகமீதில் உண்மைமனிதன் ஆகவில்லை.

ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதுபோல் அவன்
ஆவலாகப் பறப் பான்
கூலிக்கு மாரடித்து மறைப்புக்கு வேலிகட்டி
தான்மட்டும் வாழஎண்ணு வான்
சாதிக்குப் பெயர்வைப் பான்
சத்தியத்தின் வேரை அழித்து
தினம்தினம் நீரூற்று வான்
மரம்கருகிச் செத்து விடும்
வேறு (என்ன?) ஒன்றுமில்லை
நாள் தோறும் பாய்ச்சிய நீர்
நாலுவிஷம் கலந்த நீர்

கூடார வாழ்விலே குடிபுகுந் தோர்நாளும்
வாடாத வாழ்விலே தலைசிறந்தோர். ஆதி. 13 : 10



# விசுவாசம் என்பது என்ன?

**M. பாலகிருஷ்ணன்**
சர்வதேச வேதாகம சங்க தேசிய பணிப்பாளர்

* விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது-எபி.11:1.

* விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம்-எபி.11:6.

ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் போன்ற அநேக விசுவாச வீரர்களைப் பற்றி எபிரேயர் 11 ஆம் அதிகாரத்தில் பார்க்கலாம். விசுவாசி ஒருவனைப் பொறுத்தமட்டில் ‘விசுவாசம்’ என்பது என்ன? என்பதை நோக்குவோம். இதை அடிப்படையாகவைத்து விசுவாச வீரர் இருவரைப் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

## 1. நோவா

கப்பல் ஒன்றைக் கட்டுகிறான் இந்த நோவா. எந்தச் சூழ்நிலையில் அவன் இதைச் செய்கிறான்? பெரு வெள்ளமொன்றை அனுப்பப் போவதாகவும், அதனால் கப்பல் ஒன்றைக் கட்டும்படியாகவும் கூறுகிறார் கர்த்தர்.

இந்த நோவாவின் இருப்பிடமே ஒரு பாலைவனம். ‘மழை’ என்பதை அவன் கண்டதேயில்லை. என்றாலும் கடவுளின் கட்டளைப்படியே கப்பலைக்கட்ட ஆரம்பிக்கிறான். அதைக் கட்டிமுடிக்க நாட்கள்-மாதங்கள் அல்ல, ஆண்டுகள். அதுவும் 125 செல்கின்றன. அதற்குப் பின்னரே அங்கு மழை பெய்கிறது.

## 2. ஆபிரகாம்

பிறந்து வாழும் நாட்டை விட்டும், பழகிவரும் ஜனத்தை விட்டும் பாலைவனம் நோக்கிப் போகும்படி பணிக்கின்றார் கர்த்தர். அவன் வாழ்ந்துவரும் பட்டணமோ உயர் நாகரீகம் படைத்த ஒன்று. ஆனால் அவனோ கர்த்தரின் கட்டளைப்படி முன்பின் தெரியாத

எண்ணி அளந்திடு தேசம்; உன்னில்
எழுந்திடச் செய்வேன் பலதேசம். ஆதி. 13 : 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாலைவனத்துள் அடியெடுத்து வைக்கிறான். அங்கே பல புதிய பிரச்சினைகளுக்கும், பஞ்சத்துக்கும் அவன் முகம்கொடுக்க வேண்டி நேரிடுகின்றது. ஆனாலும் அவன் அங்கு கூடாரமிட்டு வாழ ஆரம்பிக்கின்றான்.

இதன் பின் கர்த்தர் ஆபிரகாமுக்கு ஒரு மகனைத் தருவதாக வாக்களிக்கின்றார். ஆபிரகாம் 75 வயதும் சாராள் 65 வயதும் உடையவர்களாய் இருந்த நேரம் அது. மேலும் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் நிறைவேறப் போகும் (அதாவது சாராள் குழந்தையொன்றைப் பெறும் வரை) வாக்குத்தத்தத்திற்கு ஆபிரகாம் காத்திருக்கின்றான். அவ்வாறே மகனும் பிறக்கின்றான்.

ஈசாக்கு சிறுவனாய் இருக்கும் வேளையில் இப்படி ஒரு சம்பவம். மகனைப் பலியிடுமாறு ஆபிரகாமைப் பணிக்கின்றார் கர்த்தர். தன் இதயப் போராட்டங்கள் எல்லாவற்றின் மத்தியிலும் ஆபிரகாம் அதைச் செய்ய முன்வருகின்றான்.

நோவா... கப்பலைக் கட்ட ஆரம்பிக்கின்றான். அதுவும் நீர் நிறைந்த ஓர் இடத்தில் அல்ல. அவன குடியிருக்கும் வெறும் பாலைவனத தரையிலேயே கப்பலைக் கட்டுகின்றான். இவ்விதமாக அவன் கப்பலைக் கட்டும்போது அவன் எதிர்நோக்கிய பிரச்சினைகள் எவ்விதமாய் இருந்திருக்கும்? என்பதைச் சிந்தித்தால்...?

மலைப் பிரதேசம் ஒன்றில் குடியிருக்கும் ஒருவர் கப்பலொன்றைக் கட்டுவாரோ? சரி. பிரமாண்டமான வெள்ளம் ஒன்றுதான் வரப்போகிறது என வைத்துக் கொள்ளுவோம். கப்பலொன்றைக் கட்ட ஆரம்பிக்கிறார் ஒருவர். என்ன நேரிடும்? அயலவர் அவரைப் பார்த்து நகைக்க மாட்டார்களா? ஒவ்வொரு வருடமும் கழியும் போதும் வெள்ளம் வராமல் போனால் கப்பலைக் கட்டுபவர் பரிகாசத்துக்கு உள்ளாகமாட்டாரா? அப்படியே சில வருடங்கள் வரை மழையும் பெய்யாமல், வெள்ளமும் வராமற் போனால் அவருக்குப் 'பைத்தியக்காரப் பட்டம்' வராமல்போகும் என்பது என்ன நிச்சயம்?

இத்தகைய பிரச்சினைகளை நோவாவும் எதிர்கொள்ளத்தான் செய்தான். ஒன்றிரண்டு ஆண்டுகள் அல்ல; 125 ஆண்டுகள். அதாவது ஒன்றேகால் நூற்றாண்டு. ஆனாலும் அவன் அனுதினமும் விசுவாசத்தோடு வேலைசெய்து திருப்திகரமாக அப்பணியை நிறைவு செய்கிறான். அதன் பெறுபேறாக தனது குடும்பத்தைக் காப்பாற்ற

---

**அப்பமும் ரசமும் பெற்று ஆபிரகாம்**
**எப்பவும் மெல்கிசேதேக் ஆனான். ஆதி. 14 : 18**



அவனால் முடிகின்றது. எத்தனையோ உலக ஏளனத்துக்கு மத்தியிலும் கர்த்தரின் வார்த்தையை விசுவாசத்தோடே கடைப்பிடித்த காரணத்தினாலே நோவா வெற்றியும் காண்கின்றான். வேதாகமத்திலும் விசுவாச வீரனாக இடம் பிடித்துக் கொள்ளுகிறான்.

மறுபுறத்தில் ஆபிரகாமின் நிலையை நோக்குவோம். ஆபிரகாம் தனது நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இது கர்த்தரின் கட்டளை. 'ஆபிரகாமின் தகப்பனாகிய தேராகு தனது மகனாகிய ஆபிரகாமையும் அழைத்துக் கொண்டு 'ஊர்' என்னும் பட்டணத்தை விட்டுப் போனான்' எனப் பார்க்கின்றோம். (ஆதி. 11:31) எனவே குடியிருந்த நாட்டைவிட்டு ஆரானுக்கு வரும்படி ஆபிரகாமைக் கர்த்தர் அழைத்தபோது அவனுடைய தந்தையும் அவனோடு சேர்ந்து கொண்டான் என்பது தெளிவாகின்றது. தேராகு இறக்கும் வரை (அதாவது 15 ஆண்டுகள்) அவர்கள் அங்கேயே தங்கிவிடுகிறார்கள்.

அப்படியானால், நடந்தது என்னவாக இருந்திருக்கும்? ஆபிரகாம் கடவுளின் அழைப்பையேற்று நாட்டைவிட்டு வெளியேற விரும்பிய போது அவனது தந்தை அவனைத் தடுத்து நிறுத்த முயன்றிருப்பான். ஏனெனில், சகல வசதிகளையும் கொண்ட பட்டணத்தை விட்டுப் பாலை நிலம் நோக்கிப் புறப்படும் ஒருவன் மடையனாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் ஆபிரகாமோ வெளியேறுவதில் உறுதியாக இருக்கின்றான். எனவேதான் அவனும் மகனோடு போய் ஆரானிலே தங்குகின்றான். இதன் காரணமாகவே ஆபிரகாம் அங்கிருந்து அடியெடுத்து வைப்பதற்கு தனது தந்தை மரிக்கும் வரை காத்திருக்க வேண்டியதாகிறது.

'ஆபிரகாம் ஆரானிலே இருந்த நாட்களில் கடவுள் ஒரு நாளேனும் அவனோடு பேசவில்லை' என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். உரிமையோடு கூடிய ஒரு தந்தையின் அன்பினிமித்தம் கடவுளின் திட்டமொன்று தடைப்பட்டிருந்ததை இங்கே நாம் காண்கின்றோம்.

மேலும் தனது 75வது வயதில் தனக்கு ஒரு மகனைத் தருவதாக கடவுள் வாக்களித்த வேளை ஆபிரகாம் அதை இலகுவாக ஏற்றுக் கொண்டுவிட்டான். ஆனால் ஆண்டுகள் பல கடந்தன. காரியமோ எதுவுமே நடக்கவில்லை. எனவே அவன் சோர்வடைகின்றான். அவனது மனைவியோ அதை மேலும் மோசமாக்குகிறான். இந்த விடயம் சாத்தியப்படவே மாட்டாது என்ற முடிவுக்கு வருகிறாள்

---

**உன்பெயரும் கோர்பிள்ளை தருவேன் மண்ணில்**
**எந்நாளும் எண்ணற்ற திரளாய். — ஆதி. 15 : 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராள். எனவே, தனது பணிப் பெண்ணாகிய ஆகாரை ஆபிரகாம் மனையாளாக்க வேண்டும் என்ற யோசனையைக் கூறுகின்றாள்.

பத்தாண்டுக் காலமாக எதுவித பலனுமே இல்லாதபடியினால் அதற்குச் சம்மதிக்கின்றான் ஆபிரகாம். இப்புதிய உறவு காரணமாக இஸ்மவேல் பிறக்கின்றான். ஆனால், கடவுளின் திட்டம் அதுவல்ல. ஆபிரகாமுக்காக சாராள் ஒரு குழந்தையைப் பெறவேண்டும்'' என்பதே அவரது வாக்குத்தத்தம். எனவே சாராள் தனது 90வது வயதில் ஈசாக்கைப் பெறுகின்றான்.

இச் சம்பவத்தில் 'தனக்கு மகன் ஒருவன் பிறப்பான்' என்ற கடவுளின் வாக்குத்தத்தத்தை நம்பிக்கொண்டிருப்பது ஆபிரகாமுக்கு இலகுவாக இருந்ததா? இல்லை. இயல்பாகக் கூறப்போனால் அது நடக்கக்கூடிய காரியம் அல்ல. அது நடக்கக் கூடாத காரியம் என்பதாக அவனது மனைவியே குறிப்பிடுகின்றாள். ஆபிரகாமுக்கும் சந்தேகம் இருந்திருக்கலாம். ஆனாலும் அவன் 25 ஆண்டுக் காலம் ஒரு மகனுக்காகக் காத்திருக்கிறான். அவன் தோல்வி கண்டது ஏதோ உண்மைதான். என்றாலும் மீண்டும் அவன் விசுவாசிக்கின்றான் என்பதும் உண்மையே.

அடுத்த கட்டம் - அவனது அந்த ஒரே மகன் பலி செலுத்தப்படல் வேண்டும் என்பது கடவுளின் கட்டளை. இந்த வார்த்தையைக் கேட்ட தந்தையின் இதயம் என்ன பாடுபட்டிருக்கும்? எந்த மகனுக்காக 25 ஆண்டுகள் ஏக்கத்தோடு காத்திருந்தானோ அந்த மகனை தனது சொந்தக் கரங்களினாலேயே கொல்ல வேண்டியநிலை. ஆனாலும் ஆபிரகாம் கீழ்ப்படிகிறான். தனது மனைவியிடம் கூடக் கூறிக்கொள்ளாமலேயே அதிகாலையிலேயே புறப்பட்டு விட்டான் என வேதாகமம் கூறுகின்றது. ஏனெனில் பெற்றவளுக்கு இச்சம்பவம் தெரிய வந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை எம்மால் ஊகிக்க முடியும்.

ஆபிரகாமும் மகனுமாக மலையை நோக்கிப் போகின்றார்கள். மகனுடைய பல கேள்விகளுக்குத் தந்தை பதில்சொல்ல வேண்டிய நிலையேற்படுகிறது. அதேவேளை தனது மனப்போரட்டங்களுக்கும் அவன் முகம்கொடுக்க வேண்டியவனாகின்றான். ''உண்மையாகத்தான் இப்படிச் சொன்னாரோ?'' என்ற கேள்வியைப் பல தடவைகள் அவனது மனம் அவனைக் கேட்டிருக்கும்.

ஆனாலும் அவன் அனைத்துச் சந்தேகங்களையும் மேற்கொண்டு நம்பிக்கையோடு கீழ்ப்படிகிறான். எனவே, விசுவாசம் என்பது

---

**ஆகாரின் அங்கலாய்ப்பை ஆண்டவர் கேட்க**
**நீங்காமல் நீரென்னைக் காண்போரென்றாள். ஆதி. 16 : 13**



பெரும் பிரச்சினைகளின் மத்தியிலும் கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்படியும் ஒரு தன்மையை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய ஓர் ஆற்றலாகும். உலகம் சிரிக்கிறதே என்று ஒதுங்கிப் போகும் தன்மையல்ல அது. சந்தேகத்தினாலோ அல்லது பெலவீனத்தினாலோ மேற்கொள்ளக்கூடியதுமல்ல. இடையில் சிலவேளை தோல்வியடைய நேரிடலாம். ஆனால், மீண்டும் எழும்பி பாவமன்னிப்புக் கோரி அதைத் தொடர வேண்டும்.

அந்த விசுவாச வீரர்களும் இதையேதான் செய்தார்கள். அவர்கள் பெலவீனமற்ற வலுவான மனிதர்கள் அல்ல. அவர்களும் எம்மைப் போன்றவர்களே. எமக்குள்ள அதே பயமும் சந்தேகங்களும் அவர்களுக்கும் உண்டு. இருப்பினும் கடவுளுக்குக் கீழ்ப்படிவதற்காக அவர்கள் பல வகையிலும் போராட வேண்டியிருந்தது.

நாமும் விசுவாசிகள்தான். நம்பிக்கை கொண்டவர்கள்தான். கடவுளுக்குக் கீழ்ப்படிய நாமும் அழைக்கப்பட்டுள்ளோம். கப்பலைக் கட்டும்படியாகவோ, நாட்டை விட்டு வெளியேறும்படியாகவோ கடவுள் எம்மை அழையாதிருக்கலாம். ஆனால் அநேக வேறு காரியங்களைச் செய்ய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். எம் அயலவர்களில் அன்புகூர்ந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை நாம் செய்ய வேண்டுமென கர்த்தா எதிர்பார்க்கிறார். ஆனால் அது வெகு சிரமமான காரியமே. அப்படியே அவர்களைத் தனியாக விட்டுவிடுவது அதைவிட இலகுவானது. ஆனால் கடவுள் அவ்வாறு கூறவில்லையே.

மேலும், 'உனக்கு விரோதமாய்த் தவறு செய்கிறவர்களை மன்னிப்பாயாக' என்கிறார் கடவுள். அது இலேசான காரியமா? போதனைக்கு இலேசான காரியம்தான். ஆனால் அத்தகைய சூழ்நிலை ஒன்றைச் சந்திக்க நேரிடும்போது அது மிகக் கஷ்டமாகவே இருக்கும். 'நான் வேதனைப்படுத்தப்பட்டேன். அந்த நோவை இன்னமும் மறக்க முடியவில்லை, அவ்வாறு எனக்குச் செய்த மனிதன் தண்டிக்கப்படவே வேண்டும். நான் துன்பப்படுத்தப்பட்டதுபோல அவரும் துன்பப்பட வேண்டும். அந்த மனிதன் கஷ்டப்படுவதைப் பார்த்தால் தான் எனக்கு நிம்மதியே ஏற்படும்' என்று கூறுவது சரியா? இல்லை. மன்னிக்கும்படியாக கூறுகிறார் கர்த்தர். அதை எவ்வாறு என்னால் செய்ய முடியும்? எல்லாரும் என்னைப் பார்த்துச் சிரிப்பார்களே! கோழை யெனக்கூறி கேலி செய்வார்களே! எனச் சிந்திப்பதா?

'வேதனைகளைப் பற்றி நான் அறிவேன். என்னையும் துன்பப்படுத்தினார்கள். நானும் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டேன்.

( தொடர்ச்சி 24-ம் பக்கம் )

---

**ஆபிரகாம் கேட்டதோ பத்துந்தி மான்கள்**
**ஆண்டவர் கேட்டதோ ஒன்றேயொன்று. — ஆதி. 18 : 32**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்

**1882 இல் எழுதப்பட்ட 'ஒரு பாவியின் தியானக் காட்சி'**

## 6. இயேசுவின் அரை

இரட்சகருடைய 'அரை'யைப் பற்றி நேரான ஒரே குறிப்பு மாத்திரம் புதிய ஏற்பாட்டில் வருகிறது. ஆத்தும நேசர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இரவு பஸ்கா போஜனத்தைப் புசிக்கையில் தமது சீஷருடைய கால்களைக் கழுவி, தாம் அரையில் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் ஒவ்வொரு சீஷனுடைய கால்களையும் துடைத்தார். இச் செய்கையைப் பற்றி யோவான் நுட்பமாகச் சொல்லும் சில வார்த்தைகள் அதன் விசேஷத்தை நன்றாய் உணர்த்து கின்றன. இரட்சகர் பந்தியமரும்போது தாம் அணிந்துகொண்டிருந்த

வஸ்திரத்தைக் கழற்றினார்.
அதைத் தூரத்திலே சுருட்டி வைத்தார்.
ஒரு சீலையைப் போய் எடுத்தார்.
அதை அரையிலே கட்டிக் கொண்டார்.
ஒரு பாத்திரத்தைத் தேடி எடுத்தார்.
தண்ணீர்க் குடத்தண்டை போனார்.
தண்ணீர் வார்த்தார்.
அப்புறம் ஒரு சீஷனது கால்களைக் கழுவ இழுத்தார்.
அவன் கால்களைக் கழுவினார்.
கழுவின பின் துடைத்தார்.
பின்பு இரண்டாம் சீஷன் கால்களைக் கழுவினார்.
கழுவின பின் துடைத்தார்,
இப்படியே பன்னிருவரையும் கழுவினார்.
பன்னிருவரையும் துடைத்தார்.
எல்லாரையும் கழுவின பின்பு பாத்திரத்தையும்
சீலையையும் அப்பாலே வைத்துவிட்டார்.
பின்பு தமது வஸ்திரங்களைப் போட்டார்.
திரும்பப் பழையபடி உட்கார்ந்தார்

என்பதாக அப்போஸ்தலனாகிய யோவான் எழுதிய குறிப்பு ஒவ்வொன்றும் மனதில் தைக்கப் பாயும் ஞான பாணம் போல் இருக்கிறது.

**உப்பாக உருக்கொண்ட லோத்தின் மனைவி**
**எப்போதும் உலகுக்கு எடுப்பானாள். — ஆதி. 19 : 26**



1. இரட்சகர் அடிமையின் ரூபமெடுத்து, மனித ரூபமாய்க் காணப் பட்டுத் தாழ்ந்ததும் போதாதென்று ஓர் அடிமை செய்யும் நீச ஊழியம் வரை தம்மைத் தாழ்த்தினார்.
2. பாவம் தவிர ஏனைய எல்லாவற்றிலும் அவர் எம்மைப் போல் ஆனார்,
3. பூர்வ ஆசாரியர் விசித்திரமான கச்சையைக் கட்டிக்கொண்டு பணிவிடை செய்தார்கள்.
4. சவுலும் சாமுவேலும் சணல் நூல் சால்வையைக் கட்டிக்கொண் டிருந்தார்கள். தேவதூதர்கள் பொற்கச்சைகளைக் கட்டியவர் களாய்ப் புறப்பட்டார்கள்.

ஆனால், தாவீதை வல்லமையினாலும் மகிழ்ச்சியினாலும் இடை கட்டினவரும், பராக்கிரமத்தையும் நீதியையும் சத்தியத்தையும் கச்சையாகவும், மகிமையையும் மகத்துவத்தையும் பட்டயமாகவும் அரையிலே கட்டிக்கொண்டு ஜெயமாய் எழுந்தருளுகிறவருமான சர்வ லோக ராஜா திடீரென போஜனத்தை விட்டெழுந்து, தமது வஸ் திரத்தைக் கழற்றி வைத்துவிட்டு இழிவான ஒரு சீலையை அரையிலே கட்டிக்கொண்டு ஊழியம் செய்யப் புறப்பட்டு ஒவ்வொரு சீஷனு டைய கால்களையும் கழுவித்துடைக்கிறார்.

● ''நான் ஊழியம் கொள்ளும்படிக்கல்ல; ஊழியம் செய்யும் படிக்கே வந்தேன்'' என்றாரே. அதை மெய்ப்பிக்கிறார்.

ஆத்துமாவே! இந்த உன்னத தாழ்மையை உணர்ந்துகொள்! இரட்சகர் ஏன் எதுவும் பேசாமல் பந்தியை விட்டு எழும்புகிறார்? தமது சொந்த மகத்துவத்தை வெளிப்படுத்தவா? தமது தேவ மகிமை யின் பிரகாசத்தைத் திறக்கவா? சீஷர்கள் தமது பாதத்தில் விழுந்து வணங்க வேண்டும் என்பதற்காகவா? இல்லை. அவர்களது பாதங் களைக் கழுவி தம் அரையின் சீலையால் துடைக்க.

ஏன் தமது வஸ்திரங்களைக் கழற்றி வைக்க வேண்டும்? அழுக் குப்படும் என்றா? இல்லை. தமது அங்கியின் தொங்கல்கள் தனது தாழ்மையின் ஊழியத்துக்குத் தடையாய் இராதபடிக்கு அப்படிச் செய்கிறார், தண்ணீரால் தம் அங்கி நனையாமல் தான் சிந்தப் போகும் இரத்த வியர்வையினால் நனைய வேண்டும் என்ற சித்த மோ?

தெய்வீக அங்கியைக் கழற்றி மனுஷீகத்தில் எந்த இரட்சகர், இப்போது குருமுறைக்குரிய வஸ்திரத்தையும் களைந்து விட்டு வேலைக்காரன் வேஷமாகின்றார்.

அமைதியாய் இருந்த பத்துப் பேரின் கால்களைக் கழுவுகிறார். எதிர்பேசிய பேதுருவின் கால்களையும் கழுவுகிறார்— தன்னைக்

**தப்புக்கு வித்திட்டான் லோத்து ; அது**
**எப்போதும் இருக்கும் சாதிரெண்டாய். — ஆதி. 19 : 37-38**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக் கொடுக்கப் போகும் யூதாசின் கால்களையும் கழுவுகிறாரே!!! என்ன தாழ்மை? என்ன அன்பு? ஆத்துமாவே! பன்னிருவரினதும் இருபத்தினான்கு கால்களையும் கழுவித் துடைக்க அவரது இடுப்பு நிமிராமல் இருந்த நிலைமையை நினைத்துப் பார்!

* மரித்த பக்தரின் ஆவிகளே! அரசரின் ஆத்துமாக்களே! மந்திரி பிரதானிகளின் ஜீவன்களே! என்றாகிலும் நீங்கள் உங்கள் ஊழியங்களிலே மற்றவர்களின் பாதங்களைக் கழுவியதுண்டா?
* காபிரியேலே! மிகாவேலே! கேரூபின்! சேராபீன்களே! தேவ தூதரின் சர்வ சேனைகளே! நீங்கள் இவ்வாறு செய்ததுண்டா?
* அன்பார்ந்த வாசகனே! உன்னுடைய கௌரவம் என்னும் வஸ்திரத்தைக் கழற்றி விட்டு என்றாவது இவ்வாறு செய்ய நீ எண்ணியதுண்டா? நில்! சொல்!

''தாழ்ந்தார் அவர்; உயர்ந்தோம் நாம்
இதென்ன மாறுதல்?
இதுன்னத சிநேகம்தான்
இதன்பின் ஆழங்கள்''

— இன்னும் உண்டு

## விசுவாசம் என்பது... (21ம் பக்கத் தொடர்)

எனவே உங்களுடைய வேதனையை என்னிடம் கொண்டு வாருங்கள். அவைகளை உங்களிலிருந்து எடுத்துப் போட்டு உங்களுக்கான ஆறுதலை நான் தருவேன்' என்கிறார் இயேசு.

எனவே நாம் மன்னிக்கும் போது நமது பகைவன் உண்மையாகவே ஆச்சரிப்படுவான். நம்முடைய அர்ப்பணிப்பு அவனுடைய உள்ளத்தில் கிரியை செய்ய கர்த்தர் கிருபை செய்வார்.

மேலும் பல விடயங்களுக்கு உலக ஞானத்தினால் தீர்ப்பளிக்க நாம் முற்படுகிறோம். ஆனால் விசுவாச மனிதர்களோ அவ்வாறு செய்யவில்லை. கடவுள் சொல்லி விட்டாராயின் அது எவ்வளவு இயலாத காரியமாயினும் அதற்குக் கீழ்ப்படிந்தார்கள். அது அறிவீனம் போல் காணப்பட்டாலும் கீழ்ப்படிந்தார்கள். அதுதான் அவர்கள் கடவுள் மீது கொண்டிந்த விசுவாசம். கடவுள் சொல்லி விட்டாரென்றால் அது 25 வருடமோ 125 வருடமோ செய்தே தீருவார்.

விசுவாசம் எனப்படும் இம் மனப்பாங்கை நாம் உணருகிறோமா? அவ் விசுவாசத்தைக் கட்டியெழுப்ப அழைக்கப்படுகிறோம். மிகச் சிறிய காரியம் தொடக்கம் மிகப் பெரிய காரியம் வரை நாம் கடவுளுக்குக் கீழ்ப்படியும்போது விசுவாசத்தில் நாம் வளர்ச்சியடையலாம்.

இவ் விசுவாசத்தை எம்மில் நிலைகொள்ளச் செய்ய கடவுள் உதவி செய்வாராக. ★

ஆகாருக் கொருபிள்ளை ஆண்டவ னால்அது
அடங்காத பிள்ளை அவனியிலாம். —ஆதி. 16 : 12, 17 : 18



# ஏனோக்கு - ஏ - நோக்கு

– தமிழ்நாடு J. சாம் ஜெபத்துரை –

## 7. காணவில்லை! காணவில்லை!

★ ''ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற் போனான்'' — ஆதி. 5:24

★ ''காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளாலே, உலகமுண்டானது முதற் கொண்டு தெளிவாகக் காணப்படும்.'' — ரோமர் 1:20

ஏனோக்கின் நாட்களுக்கு நேராய் என் மனதைத் திருப்புகிறேன். என் உள்ளம் காலத்தைப் பின்னே தள்ளி சிறகடித்து பழங் காலத்தை நோக்கிச் செல்கிறது. ஏனோக்கையும் அவரது குடும்பத்தையும் என் மனக்கண்கள் முன்பாகக் கொண்டு வருகிறேன்.

அது ஒரு மாலை நேரம். ஏனோக்கு முகம் கழுவிக் கொண்டு நிற்கிறார். அவர் உதடுகள் ஓர் அருமையான துதிப்பாடலை மீட்டிக்கொண்டிருக்கிறது. திடீரென்று வெளியே இருந்து 'ஏனோக்' என்ற குரல் ஒலிக்கிறது. அந்தக் குரலில் தான் எவ்வளவு அன்பு, கனிவு, பாசம்! அக்குரல் கேட்டவுடனே ஏனோக்கின் உள்ளம் பொங்குகிறது. மிக வேகமாக முகத்தைத் துடைக்கிறார். அவசரம் அவசரமாக உடைகளை மாற்றுகிறார். தன் மனைவியிடம் திரும்பி ''ஆண்டவர் வந்திருக்கிறார். நான் அவரோடு கொஞ்ச தூரம் உலாவி விட்டு வந்து விடுகிறேன்'' என்று சொல்லிப் புறப்படுகிறார். ''சீக்கிரமாக வந்து விடுங்கள்'' என்று அன்போடு மனைவி சொல்லும் வார்த்தைகள் அவரது காதில் விழவில்லை. வாசலண்டை ஆவலோடு நிற்கும் ஆண்டவரோடு கரம்பிடித்து தெருவில் இறங்கி நடக்கிறார். நேசத்தால் இருவரின் உள்ளங்களும் பொங்குகின்றன. அமைதியாக நடக்கிறார்கள். ஊருக்கு வெளியே வருகிறார்கள். மனித நடமாட்டம் குறைகிறது. கர்த்தர் பேச ஆரம்பிக்கிறார்.

நகைத்தாலும் ஒருபிள்ளை பெற்றாள் சாராள்
ஈசாக்கென் றிட்டார் பெயரை. ஆதி. 21 : 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பூமியிலே மனிதனாகப் பிறக்கப் போவதைத் தெரிவிக்கிறார். தான் பிறக்கப் போகுமிடம் வளரும் விதம் தெரிந்தெடுக்கப் போகும் சீஷர்களைக் குறித்தெல்லாம் விபரமாகக் கூறுகிறார். ஏனோக்கு களிகூர்ந்த இருதயத்தோடு காதுகுளிர அதையெல்லாம் கேட்டுக் கொண்டே வருகிறார். ''ஆண்டவரே! நீர் மனுஷகுமாரனாய் இறங்கி வரும் போது நான் இருந்தால் நிச்சயமாக உமது சீஷனாயிருப்பேன். உம்மார்பில் தலைசாய்ந்து மகிழுவேன்'' என்கிறார் ஏனோக்கு விரிந்த கண்களுடன்!

பேச்சு தொடர்ந்து கொண்டே போகிறது; கர்த்தர் கல்வாரியின் பாடுகளை விவரிக்கத் தொடங்கியபோது ஏனோக்குவினால் தாங்க முடியவில்லை. கண்களில கண்ணீர் கட்டுக்கடங்காமல் வழிந்து கொண்டேயிருக்கிறது. எவ்வளவு நேரம் நடந்தார்களோ தெரியவில்லை. இரவு இருவரும் வீடு திரும்புகிறார்கள். வீட்டின் அருகே வந்ததும் கர்த்தர் விடை பெற்றுக் கொள்கிறார். ஏனோக்கு கதவைத் தட்டியதும் மனைவியின் முகத்தில் சோகத்தைக் காண்கிறார். ''ஏங்க... சீக்கிரமாய் வீட்டுக்குத் திரும்பக் கூடாதா? பிள்ளைகள் படிக்கிறார்களா இல்லையா என்பதைக் கவனிக்கக் கூடாதா? நாளைக்கு சமையலுக்கு அரிசி பருப்பு இல்லையே! வாங்கிப் போடக் கூடாதா? பக்தியிருக்க வேண்டியதுதான; ஒரேயடியாக இருக்கக் கூடாது...'' பொரிந்து தள்ளுகிறாள மனைவி. சமாதானப்படுத்திவிட்டு குடும்ப ஜெபம் நடத்திவிட்டு சாப்பிட உட்காருகிறார்.

அடுத்த நாள், அதே மாலை வேளையில் 'ஏனோக்' என்கிற குரல் கேட்கிறது. முகம் கழுவி விட்டு ஏனோக்கு மான்குட்டி போல துள்ளி கர்த்தரிடம் ஓடுகிறார். மனைவியின் குரலைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. ஊரின் எல்லை வந்ததும் இருவரும் சம்பாஷிக்க ஆரம்பிக்கிறார்கள். கர்த்தர் தமது மகிமையான இரண்டாம் வருகையைக் குறித்து, வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் தேவனுடைய பிள்ளைகளைக் குறித்து; பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தைக் குறித்து விவரித்துக் கொண்டே வருகிறார். ஏனோக்கு அமைதியாக, ''ஆண்டவரே! மணவாளனாகிய உமக்குத் தோழனாக நான் நிற்பேன்'' என்கிறார். ஆனந்த பரவசத்தோடு நேரம் போவதே தெரியவில்லை. இரவு பத்து மணியாகி விட்டது. ஏனோக்கு சொல்கிறார் ''ஆண்டவரே நான் தினம் தினம் வீட்டிற்குப் பிந்திப் போவதால் என் மனைவி என்னைத் திட்டுகிறாள். நான் படும்பாடு உமக்குத் தெரியவில்லையே! ''அதற்கு ஆண்டவர் ''என் நண்பனே, உன்னை விட்டுப் பரலோகம் செல்லவே எனக்கு பிரியமில்லை. உன்னைப் பூமியிலே விட்டு மேலே சென்றால் பரலோகமே எனக்கு வெறுமையாக இருக்கிறது'' என்கிறார்.

ஏனோக்கு வீடு திரும்ப இரவு 11 மணி ஆகிவிட்டது. கோபமும் எரிச்சலுமான மனைவி ''நீங்கள் ஏன் என்னைக் கலியாணம் செய்து கொண்டீர்கள்'' உங்களுக்குக் குடும்பப் பொறுப்பு கொஞ்சமும் இல்லையே! முதலிலேயே சந்நியாசி ஆகி அந்த ஆண்டவருடனேயே போயிருப்பதுதானே! அந்த ஆண்டவருக்குக் குடும்பமா? மனைவியா? அவர் உங்களோடு ஜாலியாக நேரத்தைச் செலவழிக்கிறார். உங்களுக்குக் கொஞ்சமாவது குடும்பப்பாரம் வேண்டாமா?'' பொரிந்து தள்ளுகிறாள். ''ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் - சோறு போடு'' என்கிறார் ஏனோக்கு.

ஒவ்வொரு நாளும் இச் சம்பவம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஒரு நாள் அவர்கள் பேசிப் பேசி மிகத் தொலைவு சென்றுவிட்டார்கள். ஒருவருக்காக மற்றவரின் உள்ளம் நேச அன்பினால் நிறைந்து வழிந்து கொண்டேயிருக்கிறது. இன்னும் தூரமாக நடந்து கடைசியில் கர்த்தர் தன்னோடு எப்பொழுதும் இருக்கும்படி ஏனோக்கைப் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார். எத்தனையோ நூற்றாண்டுகள்... ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. ஆனாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள வேண்டிய காரியம் இன்னும் ஆயிரம் ஆயிரமாக இருக்கின்றன. அவர்களது அன்பின் ஆழத்தை – பேசி மகிழ்ந்த அன்பின் வார்த்தைகளை – சம்பாஷித்த இனிய உறவுகளை மிக அழகாக ஒரே வரியில் இரத்தினச் சுருக்கமாக வேதம் ''ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார்.'' எனக் கூறுகிறது. அதைச் சிந்திக்க சிந்திக்க அவ்வுறவை வார்த்தைகளினால் வருணிக்க முடியாமல் திண்டாடுகிறோம்.

ஆரம்பத்தில் அக்கிராம மக்கள் ஏனோக்கைக் கவனித்திருப்பார்கள். ஏதோ ஒரு புதிய பக்தி; கர்த்தரோடு கொஞ்ச நாள் கொஞ்ச தூரம் நடப்பார் என்று தான் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் ஏனோக்கோ பரலோகம் வரை நடந்தார். கூட நடப்பவர் மனிதனென்றால் அது பூமிக்குரிய தடையாயிருக்கும் பாவியோடு நடந்தால் அவன் சினிமாவுக்கும், குடிக்கும், கூத்துக்கும் கொண்டு செல்வான். ஆனால் ஏனோக்கு பரிசுத்தமும் நித்திய வாசியுமானவரோடு நடந்ததால் அவர் அவனைப் பொன்னொளி வீசும் பரலோகத்துக்குக் கொண்டு சென்றார். அல்லேலூயா! — இன்னும் உண்டு.

---

ஈசாக்கைப் பலியிட இறைவன் கேட்க
பேசாமல் துணிந்தான் ஆபிரகாம். — ஆதி. 22 : 18

மம்ரேயின் மக்பேலா குகையில் மறைத்தான்
மனைவி சாராள் மரித்தபோது. — ஆதி. 23 : 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பார்வையில் தொடர்பு

★ தொடர்பு தொடர்ந்து வளர்ந்து பெருக என் ஜெபங்கள்.

— மலர் கிங்ஸ்றன், பதுளை.

★ கடந்த காலம் முழுவதும் தேவன் தாமே உங்களையும் உங்கள் ஊழியத்தையும் பாதுகாத்து வழிநடத்தியது போல இந்த வருடம் முழுவதும் உங்கள் ஊழியங்கள் மூலம் புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும், அற்புதங்களைச் செய்யவும் கூடுதலான கிருபையைப் பெருகச் செய்வாராக. எங்களிடம் வரும் சகல நோயாளிகளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான தேவன் என அறிந்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அனுப்பும் சஞ்சிகை பெரும் ஆசீர்வாதமாக அமையும் என நான் விசுவாசிக்கிறேன்.

— Dr. N. N. வின்சென்ட், மட்டக்களப்பு.

★ தொடர்பு சஞ்சிகை மூலம் எமது பகுதி ஆவிக்குரிய கிறிஸ்தவ மக்கள் நற்பயனடைந்து பல ஆவிக்குரிய தத்துவங்களை அறிந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் மேலும் இது ஆவிக்குரிய கட்டுரைகள், தூதுகளினால் நிரம்பி இன்னும் பல பக்க இதழ்களாய் துளிர்க்க வேண்டும்.

— Pastor S. J. Pathinathan-Jaffna.

★ தொடர்பு மிக அருமையான கிறிஸ்தவ சஞ்சிகை. அனைவரையும் கவரக்கூடிய அமைப்பு. 16வது இதழில் 'தொழிலாளர் தினம்' மிக அருமையான கட்டுரை. 'எஸ்தர் ஒரு விசுவாச மங்கை'- முழுப் புத்தகத்தையும் படித்த நிறைவைத் தருகிறது. 'ஏனோக்கு-ஏ-நோக்கு' எம்மை ஆராய்ச்சியாளராக்குகிறது. 'கொக்ரக்கோ' நகைச்சுவை சிந்தனையைத் தூண்டுகிறது.

— போல்வில்சன்-கொழும்பு-14.

★ தொடர்பிலுள்ள புதிய ஆவிக்குரிய காரியங்கள் நல்ல கருத்துக்களையும் மனதுக்கு ஆறுதலையும் அளிக்கிறது.

— J. P. D. சத்தியநாதன், கட்டபூலா.

---

கர்த்தரால் ஆசி பெற்றவரே, வாரும்;
காத்திருப்போம் உம்மகிமை காண. ஆதி. 24 : 3



# கொக்ரக்கோ!



**அருள்திரு. ராஜ்பகதூர் அடிகளார்**

● இவ்வாக்கத்தை இச் சஞ்சிகையில் வெளியிட அனுமதித்த ஆக்கியோனுக்கு எமது நன்றிகள்

## அத்தியாயம் — 9

## சிறையில் கொக்ரக்கோ!

ஆலயத்தின் கோபுரத்தில் செங்கொடி ஒன்று பறந்து கொண்டிருந்தது. அதில் ஒரு புறம் சிலுவைச் சின்னமும் மறுபுறம் 'அரிவாள் கத்தி' சின்னமும் இருந்தது.

காரில் இருந்து இறங்கியவுடன் கொடியிலுள்ள சின்னங்களின் விளக்கத்தைக் கேட்டான் வேதமாணிக்கம். சுந்தரம் மௌனம் சாதிக்கவே கொக்ரக்கோ தாமாக விளக்கம் கொடுக்கத் தொடங்கினார். ''கொடியில் உள்ள சிலுவை கிறிஸ்து பட்ட பாட்டைக் குறிப்பதுபோல் அரிவாளும் கத்தியும் ''கிறிஸ்துவை மெய்யாய் விசுவாசிக்கிறவர்களை மற்றவர்கள் படுத்தும் பாட்டைக் குறிக்கிறது'' என்றார்.

சுந்தரத்தின் கண்களில் தீப்பொறி பறந்தது. ''வேதமாணிக்கம் உன் கோழியைக் கொஞ்சம் அடக்கிவை. இல்லையென்றால் நீங்கள் ஊர்போய்ச் சேருவது கஷ்டம்'' என்றார்.

மொழி பெயர்ப்பாளர் சுந்தரத்தின் உதவியோடு அன்று ஒரு அருமையான பிரசங்கத்தை கொக்ரக்கோவும் வேதமாணிக்கமும் கேட்டனர்.

---

இருமனை வியர்க்கு ஈராறு பிள்ளை
பெருக்கு பெரியோன் யோசேப்பு. — ஆதி. 30 : 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதகர் 'ஐசுவரியவான் பரலோக இராச்சியத்தில் நுழைவதைக் காட்டிலும் ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும்' என்ற பொருள்பற்றி ஆத்திரமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

நம்முடைய 'காம்ரேட் ஜீஸஸ்' அன்றைக்கே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப்பற்றி எவ்வளவு அழகாகத் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார் பார்த்தீர்களா?' என்றார். அதைச் சுந்தரம் உற்சாகமாய் மொழி பெயர்த்தார்.

பாதிப்பிரசங்கம் நடந்து கொண்டிருக்கும்போது வேதமாணிக்கத்திடம் குல்லாவை எடுத்துத் தலையில போடச் சொன்னார் கொக்ரக்கோ.

மறு நிமிஷமே போதகர் ''இந்தியாவிலிருந்து வந்திருக்கும் தோழர்களுக்கு நான் சில உண்மைகளைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய வேத ஆராய்ச்சியின் பயனாக நாங்கள் கண்ட சத்தியங்கள் இவை. முதலாவதாக காம்ரேட் ஜீஸஸ் பிறந்த ஊர் எங்களுடைய மாஸ்கோவுக்குப் பக்கத்திலேயே உள்ள பெதலமி கிராமம். பலஸ்தீனாவிலுள்ள பெதலகேம் என்று ஏகாதிபத்தியவாதிகளுடைய பைபிளில் தவறாகப் போடப்பட்டிருக்கிறது...

உலகில் புரட்சியை முதல் முதல் தோற்றுவித்தது நம்முடைய காம்ரேட் ஜீஸஸ் தான்! தரித்திரருக்குக் கம்யூனிசம் எனனும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, 'பணக்கார முதலைகளை ஒழிப்பேன்' என்று கங்கணம் கட்டிக் கொண்டு மாஸ்கோவிலுள்ள தேவாலயத்தில இருந்த பணக்காரர்களை அனறு சவுக்கால் அடித்தார். பணக்காரப பேடிகள் அலறிக் கொண்டு ஓடினார்கள். காம்ரேட் ஜீஸஸ் சிலுவையில் மரித்தார் என்று ஏகாதிபத்திய வாதிகள் தவறாகச் சொல்கிறார்கள். மாபெருந்தவறு இது. அவர் முதலாளிகளின் கைக்கூலிகளால் பரிதாபமாகக் கொலலப்பட்டார்! காம்ரேட் ஜீஸஸின் கல்லறை நமது மாஸ்கோ நகரிலேயே அவருடைய உண்மைச் சீடர்களான லெனின் ஸ்டாலின் குரோமிகோ, ட்ராட்ஸ்கி முதலிய பன்னிருவரின் கல்லறைக்கு நடுவே இருக்கிறது. எல்லோரும் கவனியுங்கள்! இன்னொரு முக்கியமான காரியம். காம்ரேட் ஜீஸஸ் உயிர்த்தெழவில்லை! இந்த மாபெரும் உண்மையை அகில உலகக் கிறிஸ்தவ சங்கத்தின் பெருந்தலைவர்க

---

**எதிரிகளானார் சோதரர் இருவர் இதயம்**
**துருவிடும் துயரச் செயல். ஆதி. 33 :**



ளான நம்முடைய அருமை நண்பர்களும் கூட இப்போது உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த இடத்தில் கொக்ரக்கோ ''இல்லை இயேசு உயிர்த்தெழுந்தார்!!...'' என்று தமது முழுப் பலத்துடன் கத்தத் தொடங்கினார்.

● பிரசங்கம் நின்றது.

மறுநாள் வேதமாணிக்கத்திற்கும் கொக்ரக்கோவிற்கும் மாஸ்கோ நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இருவரும் பதினைந்து நாள் கடுங்காவலில் வைக்கப்பட்டனர். 'கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்பதை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டால் இருவருக்கும் விடுதலை அளிக்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டது.

கடைசிநாள் வேதமாணிக்கம் 'இயேசு உயிர்த்தெழவில்லை' என்று கூறி இயேசுவை மறுதலித்து வெளியே புறப்பட்டான்! கொக்ரக்கோ சிறையிலிருந்தபடியே மூன்று முறை கூவிப்பார்த்தார். வேதமாணிக்கம் திரும்பிக்கூடப் பார்க்காமல் நடந்துவிட்டான்.

மறுநாள் காலையில் ரஷ்ய விமானம் ஒன்று பயணிகளை ஏற்றிக் கொண்டு கம்பீரமாகப் புறப்பட்டது. அதன் முன் சீட்டில் வேதமாணிக்கம் ஏறி உட்கார்ந்து கொண்டு மீண்டும் ஒரு முறை தனது டயறியைப் புரட்டி ''டாலர் அட்ரசுகளை'' சரிபார்த்துக் கொண்டான். இப்போது சிறையில் வாடும் கொக்ரக்கோவின் நினைவுகூட அவனுக்கு வரவில்லை.

அதிகாலையில் சிறைக்கதவுகள் திறக்கப்பட்டன. மொழிபெயர்ப்பாளர் காம்ரேட் சுந்தரத்துடன் நான்கு இராணுவ வீரர்கள் ஒரு இரும்புக் கூண்டை தூக்கிக் கொண்டு தயாராக வந்து கொக்ரக்கோவின் முன்னே நின்று கொண்டிருந்தனர்.

''ம் கூண்டுக்குள்ளே ஏறி உட்காரு'' என்று ரஷ்ய மொழியில் கர்ஜித்தான் ஒரு இராணுவ வீரன்.

கொஞ்ச நேரத்தில் கொக்ரக்கோவை ஏற்றிக்கொண்டு சென்ற அந்த இராணுவ வேன் ஒரு பிரமாண்டமான சிவப்பு மாளிகையின் முன் வந்து நின்றது.

---

**அரைநூற் றாண்டு குறைவாய் ஆயிரம் (950)**
**ஆண்டுகள் வாழ்ந்தான் ஆப்ராம். ஆதி. 9 : 29**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸ்டர் சுந்தரம் கொக்ரக்கோவிடம் விஷயத்தை விவரித்தான். ''இதுதான் இந்நாட்டு மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் முக்கிய மனிதர்கள் செயலாற்றுகிற தலைமைச் செயலகம். உன் தலையை இன்று இவர்கள் 'சூப்' போட்டு குடிக்கப் போகிறார்கள். 'இயேசு உயிரோடு எழும்பவில்லை' என்பதை மரியாதையாக ஒப்புக் கொண்டு இவர்களிடம் மன்னிப்புக் கேட்டால் ஒருவேளை உன்தலை பிழைத்தாலும் பிழைக்கும்'' என்றார்.

கொக்ரக்கோ அசட்டையாக ஒரு சிரிப்பு சிரித்தார். உடனே இராணுவ வீரர்களில் ஒருவன் துப்பாக்கியால் இரும்புக் கூண்டின் மேல் ஓங்கி ஒரு அடி அடித்தான். கொக்ரக்கோவின் உடலெல்லாம் நடுங்கியதோடு அவருக்கு ஒருவித மயக்கம் ஏற்பட்டது. அச் சிவப்பு மாளிகைக்குள் நுழைந்தவுடன் கொக்ரக்கோவை கூண்டை விட்டு வெளியே கொண்டு வந்தார்கள். இப்போது அவருக்கு மயக்கம் தெளிந்து விட்டது. ஒரு இராணுவ வீரனுடைய இரும்புப் பிடிக்குள் சிக்கி இருப்பதை அவர் உணர்ந்தார்.

சுமார் ஆயிரம் பேர் கூடியிருந்த 'டிரெம்ளிங்' என்ற அந்த மாளிகையில் ஓர் உயர்ந்த ஆசனத்தில் மிலிட்டரி உடையணிந்து உட்காந்திருந்தார் ஒரு முக்கிய மனிதர். அவர் தோள்பட்டையில் சில கலர்பட்டைகளும் மார்பில் பல பதக்கங்களும் தொங்கிக் கொண்டிருந்தன. 'ஜெரலிசிமோ கிரஷ்னோவ்' என்ற அந்த பெரிய மனிதர் மட்டுமே கொக்ரக்கோவிடம் சில கேள்விகளைக் கேட்டார்.

''கோழி உனக்குப் பேசக் கற்றுக் கொடுத்தது யார்?''

'கடவுள்'

இப்பதில் கேட்டு சபையோர் அதிர்ச்சி அடைந்தனர். 'ஜெரலிசிமோ' மூர்ச்சை அடைந்தார்!

— **இன்னும் உண்டு**

## 'சுவைத்திரள்'

சிரிப்பு மனித உடலுக்கு ஓர் ஔஷதம் என்பார்கள். சிந்தனை அதிகமாகும் போதும் ஏற்படும் களைப்பை சிரிப்பு சில நொடிகளில் போக்கி விடுகிறது.

**சுவைத்திரள்**

உங்களைச் சிரிக்க வைக்கும் ஒரு சஞ்சிகை.

மீன்' பாடும்தேன் நாட்டின் சிரிப்பிதழ் இச் சுவைத்திரள்.
விபரங்களுக்கு:-

K. S. தர்மகுலசிங்கம்,
481 பார் றோட், மட்டிக்குளி, மட்டக்களப்பு

**ஆவலாய்ப் படித்த அடிவரிக் கவிகளைப்**
**'பாவலர் கிரான்' ஈந்தான் குறளாய். — நன்றி.**



# அவரும் நானும்

அடியேன் பணிசெய்ய நெடுநேரம் ஆனால்
ஆமையென்பார் என்னை அருமைத் தலைவரவர்
அன்னவர் பணிபுரிய அதிகநேரம் எடுத்தால்
சிறப்பாய்ச் செய்வதாக செருக்குடன் சொல்வார்

அடியேன் எதுவும் செய்யாது விட்டால்
சோம்பேறி யென்பார் சுறுசுறுப் பாக
அன்னவர் எதுவும் செய்யாது போனால்
பலசோலிக் காரன் பார்நான் என்பார்.

சொல்லாம லேநான் பணியேதும் செய்தால்
சொல்லுவார் பெருமை உனக்குண் டென்று
சொல்லாம லேதான் அவரும் செய்தால்
முற்போக் காளன் முறைஇது என்பார்

அவரைப் பிரியப் படுத்த முனைந்தால்
எண்ணெய் பூசியோ மெழுகிறாய் என்பார்
மேலதி காரியை அவர் - அது செய்தால்
ஒத்துழைக் கின்றேன் ஒழுங்காய் என்பார்

நான்செய்யும் நிறைகளை நினைக்கின்றா ரில்லை!
நான்செய்யும் குறைகளை மறக்கின்றாரு மில்லை!

— T. ரட்னதேவி —

'*My Boss and I*' என்ற ஆங்கிலக் கவியின் தமிழ் வடிவம்


## நீங்கள் வீடு மாறினால்...

**இன்றே உங்களது**
**புதிய முகவரியை**
**எமக்கு எழுதுங்கள் !**



● பழைய முகவரியையும் இணைக்க மறவாதீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்.....! வித்துவ காய்ச்சல்

அப்படி யில்லை, இது இப்படி யில்லை!
எப்படிச் சொன்னாலும் புரியுது மில்லை!
ஆலயமணி ஏனோ ஓசையு மில்லை!
ஆட்டி அதை அடிப்பதுவும் அவ்வித மில்லை!
ஆலயத்துள் நுழைவதுவும் அப்படி யில்லை!
சென்றமர்ந்து இருப்பதுவும் இப்படி யில்லை!
பாடகர்கள் பாடுவதில் ராகமும் இல்லை!
தெரிந்தெடுத்த பாடல்களும் பொருத்தமு மில்லை.

வாத்தியத்தில் சுரமமைப்பு கொஞ்சமு மில்லை!
வாசிக்கும் வேதத்திலும் மொழி சரியில்லை!
வாசித்த பிள்ளையதன் குரல்சரி யில்லை!
பொட்டுவைத்துப் பூமுடித்த சடைசரி யில்லை!
பிரசங்கம் செய்யும்விதம் அப்படி யில்லை!
உதாரணங்கள் கொடுத்ததிலும் அர்த்தமு மில்லை!
ஜெபவேளை தெரிந்தெடுத்த ஜெபம்சரி யில்லை!
முக்காடு முழங்கால்கள் போடவு மில்லை!

நற்கருணை கொடுத்ததிலே நன்மையு மில்லை!
முடிந்தபின்பு போனவிதம் அதுசரி யில்லை!
ஆண்டவரே! என்னுடைய போதகர்கள் முதலாய்
மூப்பர்களும் சங்கங்களும் முழுப்பேரும் பிழையே!
நான்படித்த படிப்புக்கு இவைசரி யில்லை!
இதனால்தான் நான்சந்தா கொடுப்பது மில்லை!
எனக்கேனோ வாய்சும்மா இருக்குது மில்லை!
என்பேச்சை ஒருவருமே கேட்பது மில்லை!

எனைப்போன்று வேறொருவர் இவ்விடம் இல்லை!
முற்றறிந்த வித்துவன்நான்; எனக்கே 'வில்லை'
கொடுத்தாலும் என்காய்ச்சல் நீங்குது மில்லை!
ஜெபித்தாலும் ஜெபிப்பவரில் நம்பிக்கை யில்லை!
ஏனென்றால் எனக்குள்ளே 'வித்துவ காய்ச்சல்'
உடலெல்லாம் ஏற்படுது 'தத்துவ எரிச்சல்'
நானென்றால் எனக்கு வேண்டும் நல்லொரு மேய்ச்சல்
இல்லையென்றால் இங்கிருந்து உடனே பாய்ச்சல்!

**தருவது... டன்ஸ்ரன் எஸ். சாமுவேல்**

Printed by Meenambal Ganeshalingam at Kumaran Press 201, Dam Street, Colombo-12. and Published by Bro. Devadason Jeyasingh of 'Dasons' 90, Kandy Road, Kengalla on 1.7.94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org